செ.வெ.எண்: 366 நாள்: 19.07.2021

**விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நேரடியாக பயனடையும் வகையில் உழவர் சந்தைகள் அமைந்துள்ளது.**

**புதுக்கோட்டை உழவர் சந்தையை ஆய்வு செய்த பின் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகராட்சி உழவர் சந்தையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.07.2021) காலை ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் விளைவித்த காய்கறிகளை இடைத்தரகர்களின்றி நேரடியாக விற்பனை செய்வதால் உரிய லாபம் கிடைத்திடவும், பசுமையான காய்கறிகளை பொதுமக்கள் வெளி சந்தையை விட குறைந்த விலைக்கு பெற்று பயனடைந்திடவும் உழவர் சந்தை பேருதவியாக அமைந்துள்ளது. அந்த வகையில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் உழவர் சந்தையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேலும் விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை உழவர் சந்தைகள் அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, கறம்பக்குடி, விராலிமலை உள்ளிட்ட 6 இடங்களில் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றையதினம் காலை புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள உழவர் சந்தை ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளிடம் தேவைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

தங்கள் விளை நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் விளை பொருட்களை கொண்டு வந்து நேரடியாக உழவர் சந்தையில் விற்பனை செய்யும் விவசாயிகளை மட்டும் உள்ளே அனுமதித்திடவும், இயற்கை விளை பொருட்களை கொண்டு வரும் விவசாயிகளை மென்மேலும் ஊக்குவித்திடவும் வேளாண்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் உழவர் சந்தையில் உள்ள விவசாயிகள் பாதிப்படையாத வகையில் உழவர் சந்தைக்கு வெளியே விவசாயிகள் அல்லாத பிற நபர்கள் வியாபாரம் செய்வது குறித்து நகராட்சி ஆணையர் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இங்குள்ள விவசாயிகள் தங்கள் கிராம புறங்களிலிருந்து அதிகாலை நேரங்களில் வரும் நகர பேருந்துகளை உழவர் சந்தை வழியாக பேருந்து நிலையத்திற்கோ அல்லது உழவர் சந்தை வரை இயக்கிட வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை தெரிவித்துள்ளார்கள். உழவர் சந்தை விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**